# தமிழ்த்துறை செயல்பாடுகள்

# 2019-2020

**28.06.2019** கடலூர், மருத்துவம் ஊரகநலப் பணிகள் மற்றும் குடும்பநலம், உலக மக்கள் தொகை தினம் தொடர்பாக கல்லூரி மாணவர்களுக்கு **பேச்சு போட்டியினை** அரசு தலைமை மருத்துவமனை கூட்ட அரங்கில் நடத்தியது. இதில் நம் கல்லூரி மாணவர்கள், மக்கள் தொகை பெருக்கமும் அதனால் ஏற்படும் சமூக பொருளாதார விளைவுகள் மற்றும் 'பெண் சிசு கொலை தடுத்தல் மற்றும் பெண் கல்வியை ஊக்குவித்தல்' என்ற தலைப்புகளில் பேசி பரிசினை வென்றனர். வெற்றி பெற்ற மாணவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்களால் பரிசுகள் வழங்கப்பட்டன.

**05.07.2019** தமிழ்நாடு அரசு, பொருள் இயல் மற்றும் புள்ளி இயல்துறை சார்பில், 13வது புள்ளி இயல் தின விழாவினை சிறப்பிக்கும் வகையில் கடலூர், மண்டல புள்ளி இயல் அலுவலகத்தில் புள்ளி இயல் தினவிழா நடைபெற்றது. கடலூரில் உள்ள கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு புள்ளி இயல் தொடர்பான கட்டுரைப் போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் கல்லூரி மாணவர்களின் எட்டு கட்டுரை படைப்புகள் அனுப்பிவைக்கப்பட்டது. இப்போட்டியில் முதல் பரிசினை நம் கல்லூரி மாணவி ப. நீஜா (IITAE – A18TAE40) வென்றார்.

**10.08.2019** சென்னை, இராமலிங்கர் பணி மன்றம், கல்லூரி மாணவ-மாணவியருக்கான மாநில அளவில் கட்டுரை மற்றும் பேச்சுப்போட்டிகள் நடத்தப்பட்டது. இதில் நம் கல்லூரியைச்சார்ந்த (இரண்டு) மாணவிகள் பங்கேற்று சான்றிதழினை பெற்றனர்.

**06.09.2019,** அன்று பிற்பகல் 2:00 மணியளவில் தமிழ்த்துறை சார்பாக தேசிய ஊட்டச்சத்து மாதவிழாவினை சிறப்பிக்கும் வகையில் ஊட்டச்சத்துப் பற்றிய சிறப்பு உரை மாணவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

**23.09.2019,** Shri Ram Chandra Mission, மாநில அளவில் 'அன்பெல்லாம் விரிவாக்கம், சுய நலமெல்லாம் ஒடுக்கம்' – சுவாமி விவேகானந்தர் என்ற தலைப்பில் கல்லூரி மாணவர்களுக்கான கட்டுரைப்போட்டி நடத்தியது. இதில் கல்லூரியின் சார்பாக 39 மாணவர்கள் தங்களது படைப்புகளை வழங்கினர்.

**16,17,18,19,20.12.2019,** வேலூர், திருவள்ளுவர் பல்கலைக்கழகம், உலகத் திருக்குறள் மாநாடு 2020ஐ முன்னிட்டு பல்கலைக்கழக அளவில் கல்லூரிகளுக்கான கலைப்போட்டிளை நடத்தத்திட்டமிட்டது. இதில் கடலூர், தூய வளனார் கலை மற்றும் அறிவியல் கல்லூரி நான்கு மாவட்ட மையங்களுள் ஒன்றாக இருந்து கடலூர் மாவட்ட கல்லூரி மாணவர்களுக்கான இருபது கலைப் போட்டிகளை நடத்தியது. இதில் பலகல்லூரிகளில் இருந்து மாணவர்கள் பங்கேற்றனர். இப்போட்டியில் நம் கல்லூரியின் சார்பாக மாணவர்கள் பங்கேற்ற 10 போட்டிகளில் 41 மாணவர்கள் வெற்றி பெற்று தங்கம் மற்றும் வெள்ளிப்பதகங்களை வென்றதோடு பல்கலைக்கழக அளவிளான போட்டிகளுக்கு தேர்வு செய்யப்பட்டனர்.

**14.01.2020** அன்று தமிழ்த்துறையின் சார்பாக சமத்துவ பொங்கல் விழா கொண்டாடப்பட்டது.